
வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தை திறக்க உதவும் திறவுகோல்கள்



## Keys To UNLOCK The BIBLE

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## வேதாகமத்தை திறக்க உதவும் திறவுகோல்கள்

## Keys To Unlock The Bible




**கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே**

பரிசுத்த வேதாகமம் இவ்வுலகில் எவ்வளவு முக்கியமானதாக இருந்து வருகிறது. உலகில் அதிகம் பேர் பயன்படுத்தும் புத்தகம் வேதாகமம் ஆகும். முதன் முதலில் அச்சிடப்பட்டதும், அநேக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதும், தன்னிகரற்றதுமாய் மேலோங்கி நிற்கிறது. நம் பரிசுத்த வேதாகமம். அதே சமயத்தில் தவறாக புரிந்து கொள்ளப்படும் இடத்திலும் முதலிடம் வகிக்கிறது. அநேக நூற்றாண்டுகளாக எங்குமிருக்கும் மனிதனுக்கு குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது. புரிந்து கொள்வதற்கு கடினமான சிருஷ்டிப்பு, பழைய ஏற்பாட்டின் நிழல்கள், ஆசாரிப்பு கூடாரத்திட்டம், தீர்க்கதரிசனங்கள், கர்த்தரின் உபதேசங்கள், அப்போஸ்தலரின் நிருபங்கள், வெளிப்படுத்தின விஷேசத்தில் உள்ள கடினமான அடையாளங்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடாகத் தோன்றும் வசனப்பகுதிகள் இவையனைத்துமே இக்குழப்பத்திற்குக் காரணம். ஆனால் தேவனுடைய வார்த்தையில் (சத்தியத்தில்) எவ்வித குழப்பமும் இருக்க வாய்ப்பில்லை என்பதை முதலில் உணரவேண்டும்.


வேதாகமத்தை முறைப்படி கற்று புரிந்து கொள்வதற்கு உபயோகமான ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஐந்து முக்கியமான முறைகள் உள்ளன. இம்முறைகள் தெரியாததாலேயே இன்று அநேகர் வேதத்தை படித்தாலும் அதின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்ள முடிவதில்லை என்பதோடு அதின்மேல் விசுவாசமில்லாதவாகளாக இருப்பதை காணமுடிகிறது.

## முறை – 1 ஒரு தலைப்பின் கீழ் படிப்பது
## (Exhaustive Topical Examination)

சில காலம் முன்பு வரை ஒரு தலைப்பின் கீழ் உள்ள எல்லா வசனங்களையும் முழுமையாக ஆராய்ச்சி செய்வது மிகமிக கடினமானதொன்றாகும். உதாரணமாக ஆதாம் அல்லது ஏவாள் பற்றி தெரிந்துகொள்ள அவர்கள் பற்றி உள்ள அனைத்து வசனப்பகுதிகளையும் முழுமையாக எடுத்து ஆராய வேண்டும். ஆனால், வேதத்தில் எந்தெந்த வசனங்கள் எங்கெங்கு உள்ளது என கண்டுபிடிப்பது மிகவும் கடினமானதும் இயலாததுமாகும். ஆனால் தற்சமயங்களில் இரண்டு உலக புகழ்பெற்ற வேத அகராதிகள் உலகில் இருப்பதால் ஒரு தலைப்பின் கீழ் படிப்பது மிகமிக சுலபமானதாகிவிட்டது.




1.ஸ்டாரங்ஸ் வேத அகராதி
(Strong's 'Exhaustive Concordance)
2.யங்ஸ் வேத அகராதி
(Young's Analytical Concordance)




இவ்விரு அகராதிகளைக் கொண்டு வேதத்தில் வரும் ஒவ்வொரு வார்த்தைகளும் எங்கு எத்தனை முறை வருகிறது என்பது ஒவ்வொரு தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளதால் சில நிமிடங்களிலேயெ கண்டுபிடித்து விடலாம். இங்கு ஒரு உதாரணத்தை கவனிப்போம். பூமி பற்றிய ஆராய்ச்சியில் பூமி என்று வருகிற அனைத்து வசனப்பகுதிகளையும் ஆராய்ச்சி செய்தால் கீழ் கண்டவாறு ஒன்றுக்கொன்று முரண்பாடான விபரங்கள் கிடைக்கிறது. முதலாம் கட்டத்தில் பூமி அழிந்துவிடும் என்றும் பூமி என்றென்றும் அழியாது என இரண்டாவது கட்டத்திலும், புதிய பூமி என கடைசிகட்டத்திலும் கிடைக்கிறது.

The Earth




| பூமி அழிந்துவிடும் | பூமி என்றென்றும் நிலைத்து நிற்கும் | புதிய பூமி |
|---|---|---|
| மத்தேயு 24:35<br>எபிரேயர் 1:10,11<br>செப்பனியா 3:8 | மத்தேயு 6:10<br>மத்தேயு 5:5<br>ஏசாயா 45:18<br>சங்கீதம் 104:5<br>பிரசங்கி 1:4 | 2 பேதுரு 3:13<br>வெளி 21:1 |

மேற்கண்ட ஆராய்ச்சியில் ஒன்றுக்கொன்று முரண்பாடான விஷயங்கள் கிடைத்திருப்பினும், இது ஒரு உபயோகமான முறையாகும். மேலும், இங்கு காணப்படும் முரண்பாடுகளைக் களைந்து உண்மையான சத்தியத்தை அறிந்துகொள்ள இன்னும் உள்ள முறைகளையும் பயன்படுத்த வேண்டும்.


## முறை -- 2 அடையாள மொழியில் ஆராய்வது (Study of Symbolic Language) .

பூமி பற்றிய ஆராய்ச்சியில் முதலாம் முறை உபயோகமாயிருப்பினும் அதைபற்றி புரிந்துகொள்ள வேண்டுமெனில், பூமி பற்றி அடையாளமொழியில் ஆராய வேண்டும். அதாவது, வேதாகமத்தில் அநேக அடையாள சின்னங்கள் தரப்பட்டுள்ளது. உதாரணமாக, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், அக்கினி, சமுத்திரம், காற்று, குதிரை, கரடி, சிங்கம், கழுகு என ஏராளமான அடையாளச் சின்னங்கள் தரப்பட்டுள்ளது.


The Sun



Horse



Lion



Eagle



ஏன் தேவன் அடையாளங்கள் தந்துள்ளார் எனில், மனிதர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சில வார்த்தைகளின் அர்த்தங்களை மாற்றிவிடுவார்கள் என்பதை முன் அறிந்ததால், அடையாளங்கள் தந்துள்ளார். உதாரணமாக, சூரியன் என்றால், சில இடங்களில் நேரடியான அர்த்தம் உள்ளதாகவும், ஆனால் அடையாள மொழியில் ஆராயும்போது, பிரகாசமான ஒளி என்பது மாற்ற முடியாத உண்மையாகும்.

இங்கு, நமது ஆராய்ச்சியில் பூமி என்பதன் அடையாள அர்த்தைப் புரிந்துகொள்ள வேண்டும். 2 பேதுரு 3 **-ம் அதிகாரத்தில்** அநேகமுறை வரும்**பூமி** என்ற வார்த்தையை கவனிக்க வேண்டும்.

**வசனம் 6-இல், 'அப்போதிருந்த உலகம்"**

**வசனம் 7-இல், 'இப்போது இருக்கிற வானங்களும் பூமியும்"**

**வசனம் 13-இல், 'நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும்"**

வசனம் 6 – ன் படி ''அப்போது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினால் அழிந்தது'' என்றால் பழைய பூமி அழிந்து இப்போது நாமிருக்கும் பூமி உண்டாக்கப்பட்டதா? இல்லை மாறாக அவ்வுலகத்தின் ''அரசியல் சமூக அமைப்புகள்'' அழிந்தன என்பதே ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையாகும். ஊதாரணமாக வெள்ளத்தினால் ஊரே அழிந்து விட்டது என்றால் ஊரில் உள்ள மக்கள் என்றுதானே அர்த்தம்.

மாறாக நாம் அப்படியே சொல்லர்த்தமாக இப்பூமி கிரகம் (Planet) அழிந்துவிடும் என்று நம்பினால் மீண்டும் அதே குழப்பத்திற்கே செல்வோம். ஏனெனில் இக்கிரகம் என்றென்றும் அழியாமல் எப்போதும் நிலைத்திருக்கும் என மற்ற வசனங்களில் பார்க்கிறோமே. மத்தேயு 5 : 5, மத்தேயு 6:10, லூக்கா 2:14, பிரசங்கி 1:4 வாசிக்கிறோம்.

அதேபோல் இப்போதிருக்கிற வானங்களும் பூமியும் அக்கினிக்கிரையாக வைக்கப்பட்டுள்ளது. எனில் இப்போது பூமியில் இருக்கிற ''அரசியல் சமுதானம், பொருளாதாரம், மதம் போன்ற அமைப்புகள் அழிந்துவிடும் தவர (அதிலும் அக்கினி என்றால் முழுமையான அழிவு என்பதையே குறிக்கும்) இக்கிரகம் அழியாது என அறிகிறோம். மேலும் புதிய வானங்கள், புதிய பூமி என்றால் புதிய அல்லது வரப்போகும் உலகத்தின் அமைப்புகள் என்பதே பொருத்தமானதாகும்.

ஆக, பூமி என்றால் சில இடங்களில் நேரடி அர்த்தமாகவும், அடையாள மொழியிலும், தரப்பட்டுள்ளதை கவனிக்கவேண்டும். இதுபோலவே, அநேக அடையாளங்களின் பொருளை உணர்ந்து படித்தால் மட்டும் நமக்கு பிரயோஜனமாயிருக்கும்.

அது மாத்திரமல்ல, இன்னும் இயேசுவின் உவமைகள் 39-இலும் ஆழமான சத்தியங்கள் அடங்கியுள்ளன. உதாரணமாக, காணாமல்போன ஆடு,காணாமல்போன வெள்ளிக்காசு, கடுகு விதை, புளித்தமாவு, கெட்டகுமாரன், தால்ந்து பற்றிய உவமைகள் போன்றவை. இவையனைத்தும் 2-ம் முறையாகிய அடையாளமொழியில் ஆராயப்பட வேண்டியவை.

## முறை - 3 காலங்களை கருத்திற்கொண்டு படித்தல் (Study By Time Frame)


இதுவும் ஒரு முக்கியமான முறையாகும். 2பேதுரு 3ல் கூறப்பட்டுள்ள அதே விஷயம் மூலம் இம்முறையைப்பற்றி புரிந்துகொள்ளலாம். மனித வாழ்க்கையில் மற்றும் வரலாற்றில் உள்ள மூன்று முக்கியமான காலங்கள், இறந்தகாலம் நிகழ்காலம், வருங்காலம் குறித்து சுலபமாக அறியமுடிகிறது.

2 கொரிந்தியர் 12:1-4-இல், **'கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷ**னை அறிவேன், அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம் வரைக்கும் **எடுத்துக்கொள்ளப்பட்டான்".** அது பரதீசுபோல் இருந்தது என்றும், இனிவரும் உலகம் குறித்து அப்.பவுல் தரிசனங்களைக்கண்டார் என்பதே உண்மையாகும். .

எவ்வாறு நம் அனுதின வாழ்க்கையில் காலம் மிகவும் முக்கியமானதோ, தேவனுடைய திட்டத்திலும் காலம் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. ஆக ஒரு வசனத்தை நாம் படிக்கும்போது, அது எக்காலத்திற்குரியது என்பதை முதலில் தெளிவாக உறுதி செய்துகொள்ள வேண்டும்.

உதாரணமாக, நோவாவிடம் தேவன் பேழையைக் கட்ட சொல்லியிருக்கிறார் எனவும், இஸ்ரயேலர் ஆசரிப்புக்கூடாரம் உருவாக்கி, அதில் அநேக பலிகள் செலுத்த வேண்டும் எனவும் வேதத்தில் உள்ளது என்றாலும், இப்போது நாம் அவ்விதமாகவே செய்தால் அது சத்தியமாகுமா? ஆக, காலத்தைக் கருத்திற்கொண்டு படித்தல் மிகவும் முக்கியமானதாகும்.







## <u>முறை -4 வசனத்தின் கருப்பொருளை அறிந்து படித்தல்</u>
## (The Importance of Context)

ஆரோக்கியமாக மற்றும் வெற்றிகரமாக வேதத்தைப் புரிந்துகொள்ள உதவும் முறைகளில் இதுவும் ஒரு முக்கியமான முறையாகும். ஒரு வசனத்தை அவசரமாகப் டிப்பதைவிட நிதானமாகப் பகுத்துப் படித்து, அதன் கருப்பொருளை கண்டுபிடிதே இம்முறையின் முக்கிய அம்சமாகும்.

உதாரணமாக, 1தீமோத்தேயு 4:10 இல், ‘இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம். நிந்தையும் அடைகிறோம். ஏனெனில், எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம்” என விசுவாசிக்கிறோம்.

இங்கு அப்.பவுல் கூறும்போது. 'எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய தேவன் என்றால் ஒன்றுக்கும் மேற்பட்ட இரட்சிப்பு இருப்பதை அறிகிறோம். இரட்சிப்பு என்றால் பாவம், சாபம், மரணத்திலிருந்து விடுதலை அல்லது உயிர்த்தெழுதல் ஆகும்.

முதலாம் முறையின்படி, வசனங்களை உயிர்த்தெழுதல் என்ற தலைப்பின்கீழ் எடுத்தால், மேற்கண்ட வசனத்தின் கருப்பொருளை அறியலாம்.



**வெளி 20:6-இல், 'முதலாம் உயிர்த்தெழுதல்" என்றும்,**
**எபிரேயர் 11:35-இல்,'மேன்மையான உயிர்த்தெழுதல்" என்றும்,**
**அப்போஸ்தலர் 24:35-**இல்
**"நீதி**மான்களுக்கும், அநீதிமான்களுக்கும்
**உயிர்த்தெழுதல்" உண்டென்று** அறிகிறோம்.

ஆக, ஒன்றுக்கும் மேற்பட்ட உயிர்த்தெழுதலின் வகைகள் உண்டென்று அறிகிறோம். சுருக்கமாகச் சொல்லவேண்டுமெனில், எல்லா மனுஷரின் இரட்சிப்பு, விசேஷமான இரட்சிப்பு என இருவகையான இரட்சிப்பை உள்ளடக்கியது எனும் கருப்பொருளை அறியவேண்டும். மற்றொரு உதாரணம்,
**மத்தேயு 16:24-இல், இயேசு தம்முடைய சீ**ஷர்களை நோக்கி, 'ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து; தன் சிலுவையை **எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்"**

அதாவது, இவ்வசனத்தை ஒருவர் அவசரமாகப் படித்துவிட்டுச்செல்வ தால், எவ்வித பயனும் இல்லை. இவ்வசனத்தின் கருப்பொருளை அறியவேண்டும்.



'ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால்", எனும்போது, கர்த்தர் யாரையும் கட்டாயப்படுத்தி தனக்கு சீஷராயிருக்க அழைக்காமல், முற்றிலும் அவர்களுடைய விருப்பத்திற்கே விட்டுவிடுவதை கவனிக்கவும். அதுமட்டுமல்ல,
'தன்னைத்தான் **வெறுத்து**" என்றால் என்ன? 'சிலுவையை எடுத்து **பின்பற்றுவது**" என்றால் என்ன? என்பதன் கருப்பொருளை அறியவேண்டும். அப்போது மட்டுமே இயேசுவின் சீஷராக முடியும். ஆக, ஒரு வசனத்தின் கருப்பொருளை அறிந்து படிப்பது முக்கியமானதொன்றாகும்.

## முறை -- 5 நிழலும் பொருளும் முறையில் படித்தல்

**(Study by Type and Anti Type)**

புழைய ஏற்பாட்டில் நிகழ்ந்த பல்வேறு உண்மை நிகழ்ச்சிகள்புதிய ஏற்பாட்டின் உபதேசங்களுக்கு அருமையான நிழல்கள் ShadowsY ஆகும். **ரோமர் 15:4**-இல்,



**'முன்பு** எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக **எழுதப்பட்டிருக்கிறது"**

பழைய ஏற்பாட்டில் யாத்திராகமம் 12:1-14 -இல், கட்டளையாகக் கொடுக்கப்பட்ட "பஸ்கா", அதில் 1 வயதும் பழுதற்றதும், ஆணுமாக ஒரு ஆட்டுக்கடா அடிக்கப்பட்டு, அதின் இரத்தம் நிலைக்கால்களில் பூசப்பட வேண்டும். அந்த இரத்தம் பூசப்பட்டிருந்தால் அவ்வீட்டில் தலைச்சன் சங்காரம் நிகழாது. அவ்வாறு இல்லாத எல்லா வீடுகளிலும், மனிதன் முதல் மிருகம்வரை தலைச்சன் சங்காரம்நடக்கும்.

மேலும், அதின் மாம்சம் தண்ணீரில் வேகவைக்கப்படாமல் நேரடியாக நெருப்பில் சுடப்பட்டு, புளிப்பில்லாத அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் கையில் தடிபிடித்து, காலில் பாதரட்சை அணிந்து, தீவிரமாகப் புசிக்கவேண்டும். சம்பந்தமாக, அநேக நியமங்கள் இருந்தபோதிலும், இங்கு கூறப்பட்ட பஸ்காஆடு, ஏதோ ஒரு சடங்கு அல்ல. மாறாக, அப்.பவுல் கூறும்போது,

1 கொரிந்தியர் 5:7-இல், "பஸ்காவாகிய நம்முடைய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறாரே எனும்போது, அப்போது அடிக்கப்பட்ட அந்த ஆடு கிறிஸ்துவைக்குறக்கும் நிழல். அதேபோல பழைய ஏற்பாட்டில் நடந்த எல்லா சம்பவங்களும் புதிய ஏற்பாட்டிற்கு நிழலாகும். ஆக, இந்த ஒரு முறையும் மிகவும் முக்கியமான முறையாகும்.

ஆக, ஒரு பாடம் அல்லது உபதேசம் குறித்து முழுமையாக தெரிந்துகொள்ள வேண்டுமெனில், சில நேரங்களில் ஒன்று அல்லது இரண்டு அனைத்து முறைகளுமே பயன்படுத்த வேண்டியிருக்கும். இவ்வாறு படித்தால்மேமடநாம் உண்மையான சத்தியம் கற்று தேறினவர்களாகி, தேவனுடைய தெய்வீக திட்டத்தை உணர்ந்து, அதின்படி நடக்கிறவர்களாக ஆக முடியும்.



தேவனுடைய கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக, ஆமென்.

**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/biblereserch/